# பெரம்பலூர் நகராட்சி

**2024 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28.10.2024 ம் தேதி திங்கள்கிழமை காலை 11.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

**தலைமை : நகர் மன்ற தலைவர்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| **28.10.2024** | **பொருள்:- 01 :** பெரம்பலூர் நகராட்சி பகுதிகளில் தற்போது புதியதாக அமைக்கப்பட்டுள்ள சாலைகளில் பாதாள சாக்கடையின் ஆள் இறங்கும் தொட்டிகள் (Manhole) பள்ளமாக உள்ளதால் அதனை சாலை மட்டத்திற்கு உயர்த்தி பணி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 7.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 4159/2024/இ1. | தீர்மான எண். 773 அனுமதிக்கப்பட்டது |
| **28.10.2024** | **பொருள்:- 02 :** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 29 திறந்தவெளி கிணறுகளின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட தண்ணீரினை கிருமி நாசினி செய்யவும், பிளீச்சிங்பவுடர் தேவைக்கேற்ப வாங்கி பயன்படுத்தவும் மதிப்பீட்டு தொகை ரூ. 50,000/-க்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 4165/2024/இ1. | தீர்மான எண். 774 அனுமதிக்கப்பட்டது |
| **28.10.2024** | **பொருள்:- 03 :** பெரம்பலூர் நகராட்சியில் உள்ள 21 வார்டு பகுதிகளில் குடிநீர்விநியோகம் செய்யப்படும் குடிநீர் விநியோக குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் உடைப்புகள் மற்றும் குழாய் அடைப்புகள் ஆகியவவறறினை பொதுமக்கள் நலன் கருதி உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே, அவ்வப்போது ஏற்படும் குழாய் பழுது மற்றும் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.80 இலட்சம் மதிப்பீட்டிற்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 4164/2024/இ1. | தீர்மான எண். 775 அனுமதிக்கப்பட்டது |
| **28.10.2024** | **பொருள்:- 04 :** பெரம்பலூர் நகராட்சியில் உள்ள 21 வார்டு பகுதிகளில் உள்ள 135 ஆழ்துளை கிணறுகள் மற்றும் 29 திறந்தவெளி கிணறுகளில் உள்ள மின் மோட்டார்களில் அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதால் பொது மக்களின் நலன் கருதி உடனடியாக பழுதுகளை சரி செய்ய வேண்டியுள்ளது. எனவே, அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரிசெய்து கொடுக்க ஏதுவாக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 9.80 இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 4194 /2024/இ1. | தீர்மான எண். 776 அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td>28.10.2024</td><td>பொருள்:- 05 :பெரம்பலூர் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தில் கழிவு நீரினை வெளியேற்றம் செய்யும் துறைமங்கலம் நீரேற்று நிலையத்திலிருந்து சுத்திகரிப்பு நிலையத்திற்கு செல்லும் நீருந்து குழாயில் ஏரிக்கரை பகுதிகளில் குழாயில் உடைப்பு ஏற்பட்டு கழிவு நீர் வெளியாவதால் அதனை சரிசெய்வதற்கு அப்பகுதியில் பழுதடைந்த 600mm விட்டமுள்ள AC குழாயினை அகற்றிவிட்டு 600mm D.I குழாய் அமைத்து பணி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 5.60 இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 4162/2024/இ1.</td><td>தீர்மான எண். 777 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>28.10.2024</td><td>பொருள்:- 06 : இந்நகராட்சியின் வார்டு எண்.17 ல் உள்ள நகராட்சி நடுநிலை பள்ளியில் புதியதாக இரண்டு வகுப்பறைகளுடன் கூடிய பள்ளிக்கட்டடம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இக்கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக பள்ளி வளாகத்தில் சமையல் அறையினை இடம் மாற்றம் செய்து புதியதாக அமைக்கவும், விடுபட்ட பகுதிகளுக்கு தடுப்பு சுவர் ஆகியவற்றினை புதியதாக அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 8.00 இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 4161/2024/இ1.</td><td>தீர்மான எண். 778 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>28.10.2024</td><td>பொருள்:- 07 :பெரம்பலூர் நகராட்சியில் 135 எண்ணிக்கை ஆழ்துளை கிணற்றில் உள்ள மின்மோட்டார்களின் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின் மோட்டார் பொருத்தப்பட்டு வெகுகாலம் ஆகியுள்ளதால் அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதோடு அதன் குதிரைதிறன் குறைந்து நீர் ஏற்றம் குறைந்து அதிக மின்சார பயன்பாடு ஏற்படுகிறது. எனவே, பயன்பாட்டில் உள்ள மின் மோட்டார்கள் வாங்கப்பட்டு வெகுகாலம் ஆகி அடிக்கடி பழுது ஏற்படும் மின்மோட்டார்களை மாற்றி புதிய மின் மோட்டார் பொருத்துவதற்கும், பழுது நீக்க பணி நடைபெறும் காலங்களில் உடனடியாக மாற்று மோட்டார் (stand by moter) பொருத்தி சீரான தண்ணீர் விநியோகம் செய்ய 1.5 HP மின்மோட்டார்கள் 5 எண்ணிக்கை வாங்கி இருப்பு வைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 4160 /2024/இ1.</td><td>தீர்மான எண். 779 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>28.10.2024</td><td>பொருள்:- 09 : இந்நகராட்சியினால் நடைபெறும் திட்டபணிகள் விபரத்தினை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் தொழில் மலரில் விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளதற்கு விளம்பர கட்டணம் செலுத்த கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே கீழ்காணும் நாளிதழ்களுக்கு விளம்பர கட்டணம் செலுத்தவும் இச்செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நாளிதழ்</th><th>விளம்பரம் செய்யப்பட்ட விபரம்</th><th>விளம்பரம் கட்டணம் தொகை</th></tr>
<tr><td>1</td><td>தினகரன் நாளிதழ்</td><td>திட்டப்பணிகள் சாதனைகள்</td><td>30000/-</td></tr>
<tr><td>2</td><td>தினமணி</td><td>திட்டப்பணிகள்</td><td>17850/-</td></tr>
</table></td><td>தீர்மான எண். 781 அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | நாளிதழ் | சாதனைகள் | |
| 3 | மாலை முரசு நாளிதழ் | திட்டப்பணிகள் சாதனைகள் | 15750/- |
| 4 | தினமலர் நாளிதழ் | திட்டப்பணிகள் சாதனைகள் | 25200/- |
| 5 | தினதந்தி நாளிதழ் | திட்டப்பணிகள் சாதனைகள் | 25594/- |
| | | **மொத்தம்** | **114394/-** |

**அலுவலககுறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 3026/2024/இ1.

---

**28.10.2024**

**பொருள்:- 10 :**பெரம்பலூர் நகராட்சியில் வார்டு எண் 4 மற்றும் வார்டு 5-ல் உள்ள பகுதிகளில் அமைந்துள்ள மழைநீர் கால்வாயின் குறுக்கே மழைநீர் செல்ல வழியின்றி கழிவுநீர் தேங்கி நிற்பதால் பொதுமக்கள் அவதிக்குள்ளாகின்றனர். மேலும் போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையூறாகவும் உள்ளது. எனவே, கால்வாயின் இணைப்புபகுதிகளில் **3'** விட்டமுள்ள சிமெண்ட் குழாய்கள் அமைத்து கழிவுநீர் செல்வதற்கு ஏதுவாக பணி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 1.20 இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 4163/2024/இ1.

தீர்மான எண். 782 அனுமதிக்கப்பட்டது

---

**28.10.2024**

**பொருள்:- 11 :** பெரம்பலூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2024-25-ன் கீழ் மேம்பாட்டு பணிகள் நடைபெறவுள்ளதால் பேருந்து வளாகத்தின் உட்புற பகுதியில் செயல்பட்டு வரும் இருசக்கர வாகன நிறுத்துமிடத்தினை பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் உள்ள நகராட்.சி அலுவலக வளாகத்தின் பின்புறம் உள்ள காலியிடத்தில் இரும்பு தடுப்புகள் அமைத்து இரு சக்கர வாகன நிறுத்தம் செயல்படுவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**4.00** இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 4196 /2024/இ1.

தீர்மான எண். 783 அனுமதிக்கப்பட்டது

---

**28.10.2024**

**பொருள்:- 12 :** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட தனியார் மருத்துவமனையிலும், பொது இடங்களிலும் மற்றும் வீடுகளில் நடைபெறும் பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவை ஆகிய நிகழ்வுகளை கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. செப்டம்பர் **2024–**ம் மாதத்தில் கீழ்கண்ட விபரப்படி கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **பிறப்பு மற்றும் இறப்பு விபரம்** | **செப்டம்பர் 2024 வரை** | | |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் |
| 1 | Ãw¥ò | 83 | 71 | **154** |
| 2 | Ïw¥ò | 10 | 06 | **16** |
| | bkh¤j« | **93** | **77** | **170** |

தீர்மான எண். 784 அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | <u>அலுவலக குறிப்பு</u><br>மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>ந.க.எண். 6080/2023/ எச்1 | |
| **28.10.2024** | **பொருள்:- 13 :** பெரம்பலூர் நகராட்சிக்கு உட்பட்ட **21** வார்டு பகுதிகளிலிருந்து தினசரி 18MT குப்பைகள் உற்பத்தியாகின்றது. இதில் மக்கும் குப்பை 10.8MT ம் மக்காத குப்பைகள்7.20MT ம் அளவு சேகரிக்கப்பட்டு வருகிறது. இதில் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்பட்டு மறுசுழற்சிக்கு பயன்படாத பிளாஸ்டிக் கழிவுகளை இறுதியாக்கம் செய்யும் பொருட்டு அரியலூரில் உள்ள சிமெண்ட் ஆலைகளுக்கு ஊடு எரிபொருளாக இந்நகராட்சியிலிருந்து அனுப்பிவைக்கப்படுகிறது. தற்போது இந்நகராட்சிக்கு சொந்தமாக காம்பேக்டர் வாகனம் பழுதுநீக்கம் செய்ய ஒர்க் ஷாப்பில் இருப்பதால், பிளாஸ்டிக் கழிவுகள் அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு அனுப்ப முடியவில்லை. இதனால் அதிக அளவில் பிளாஸ்டிக் கழிவுகள் தேக்கமாகிறது.<br>ஆகையால் இந்நகருக்கு அரியலூரில் இருந்து சிமெண்ட ஏற்றி வந்து இறக்கிவிட்டு காலியாக செல்லும் போக்கு வாகனங்கள் மூலம் பிளாஸ்டிக் கழிவுகள் ஏற்றி செல்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண். /2024 /H1** | தீர்மான எண். **785** அனுமதிக்கப்பட்டது |
| **28.10.2024** | **பொருள்:- 14 :** நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.35295/ 2022/EA2 SWM-15 நாள். 10.01.2023- ன் படி அனுமதிக்கப்பட்டுள்ளவாறு இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் குப்பைகளை சேகரிக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு இவ்வலுவலக செயல்முறைகள் கடிதம் ந.க.எண். 5600/2021/எச்1 நாள். 05.05.2023ன் படி ஒப்பந்ததாரர் திருமதி.எஸ். ஜெயந்தி என்பவருக்கு 15.05.2023 முதல் ஒராண்டு காலத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டதற்கிணங்க பணி மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் ஒப்பந்தபணிக்காலம் 14.05.2024 உடன் முடிவடைந்துள்ளதை தொடர்ந்து மேலும் வெளிக்கொணர்வு முகமை ஒப்பந்த விதிமுறை -07 ன்படி மேற்படி ஒப்பந்ததாரர் திருமதி.எஸ். ஜெயந்தி என்பவருக்கு கடந்த 15.05.2024 முதல் மேலும் 3 மாத காலத்திற்கு 14.08.2024 வரை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் குப்பைகளை சேகரிக்கும் பணி மேற்கொள்வதற்கு அனுமதி நீட்டிப்பு செய்தும், மேலும் மூன்று மாத காலத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட மதிப்பீட்டு தொகையிலேயே பணிகளை மேற்கொள்ள இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண். 5600/2023/எச்1 நாள். 17.04.2024ன்படி பணிக்காலம் நீட்டிப்பு செய்திட இந்நகர்மன்ற தீர்மானம் எண். 733, நாள். 29.08.2024 ன்படி 14.11.2024 வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>மேற்படி திருமதி. எஸ். ஜெயந்தி ஒப்பந்ததாரரின் 26.09.2024ம் தேதிய கடிதத்தில் ஒப்பந்த அடிப்படை விதியின்படி ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட அதே விலைவிகிதம் மற்றும் அதில் காணும் நிபந்தனைக்குட்பட்டு 15.11.2024 முதல் மேலும் ஆறுமாத காலங்களுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் குப்பைக்கழிவுகளை சேகரிக்கும் பணியினை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார் மற்றும் 10% சதவீதம் உயர்த்தி செயல்முறையினை வழங்கிடவும் தெரிவித்துள்ளார்.<br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் உத்தரவின்படி அதே விலைவிகிதத்தில் 15.08.2024 முதல் 14.11.2024 வரை மூன்று மாத காலத்திற்கு பணிநீட்டிப்பு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஆறுமாத காலத்திற்கு 15.11.2024 முதல் 13.05.2025 வரை அதே விலைவிகிதத்தில் பணிநீட்டிப்பு செய்திட அனுமதி வழங்கிடவும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ. 2.22 கோடி மற்றும் தற்போது | தீர்மான எண். **786** அனுமதிக்கப்பட்டது |

திருமதி.எஸ்.ஜெயந்தி ஒப்பந்ததாரர் 26.09.2024ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளப்படி ஒப்பந்த விதிகளின் அடிப்படையில் 10% உயர்த்தி பணியாணை வழங்க கோரப்பட்டுள்ளது. மேற்படி Bid Document Page No. 115 & 116, Section.C 9.3 Machanism for Payment – Escalatied Rate means Initial rate quoted in the Commercial Proposal of the REP escalated by 10 % every year on the First year Tipping Fee) கோரியுள்ளவாறு 15.05.2024 முதல் பழைய ஒப்பந்த தொகையில் 10% உயர்வு செய்து வழங்கவும், இதற்கான உத்தேச செலவின தொகை ரூ.23.00 இலட்சத்தை சேர்த்து மொத்த தொகை ரூ.2.45 கோடி இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** **மன்றம்அனுமதிக்கலாம்.** **ந.க.எண். 5600/2022 /H1**

**28.10.2024**

**பொருள்:- 15 :பெரம்பலூர் நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார தளவாடசாமான்கள் வாங்குவதற்கு 20.09.2024அன்று மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளி கோரப்பட்டது. அதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளி கொடுக்கப்பட்டுள்ளது.**

தீர்மான எண். 787 அனுமதிக்கப்பட்டது

| வ. எண் | பொருள் விபரம் | எண்ணிக்கை / கிலோ | S.JAYANTHI, NO.497, Attur Main Road, Perambalur - 621212 | Kannan, Contractor, M.G. puram, Perambalur | Tamilnadu Water supplys & Drainage System |
|---|---|---|---|---|---|
| 1 | நீர்த்த சுண்ணாம்பு தூள் | 1 கிலோ | 9.00 | 10.62 | 11.80 |
| 2 | பிளீச்சிங் பவுடர் | 1 கிலோ | 47.00 | 53.69 | 57.58 |
| 3 | வாசனை பினாயில் | 1 லிட்டர் | 89.09 | 92.63 | 94.40 |
| 4 | ஆசிட் (டாய்லெட் சுத்தம் செய்ய) | 1 லிட்டர் | 75.52 | 81.42 | 83.78 |
| 5 | சோப்பு ஆயில் | 1 லிட்டர் | 194.70 | 201.78 | 210.04 |
| 6 | பிளாஸ்டிக் ஸ்பிரேயர் | 1 எண்ணிக்கை | 4720.00 | 5310.00 | 5487.00 |
| 7 | கையுறை காட்டன் & சிந்தெட்டிக் மிக்ஸ்டு | 1 எண்ணிக்கை | 140.00 | 151.04 | 153.40 |
| 8 | ரோடு தள்ளும் நார் பிரஸ் | 1 எண்ணிக்கை | 420.00 | 495.6 | 507.40 |
| 9 | தென்னை விளக்கமாறு | 1 எண்ணிக்கை | 45.00 | 53.1 | 57.82 |
| 10 | தட்டி மிளார் | 1 எண்ணிக்கை | 460.00 | 531 | 548.70 |
| | | | **6200.31** | **6980.88** | **7211.92** |

குறிப்பு : மேற்கண்ட பணிக்கு **20.09.2024** பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் **1** உள்ள S.JAYANTH, NO.497, Attur Main Road, Perambalur என்பவர் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** **மன்றம் அனுமதிக்கலாம்.**

| | | |
|---|---|---|
| **28.10.2024** | **பொருள்:- 16 :** இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் கனரக வாகன எண். TN 46 P 4158 மற்றும் TN 46 Q 1819 பழுதுநீக்கம் செய்து தருவதற்கு ஆகும் செலவினம் தொகை ரூ. 6,27,000/- (ஆறு இலட்சத்து இருபத்தி ஏழாயிரம் மட்டும்) மட்டும் மேற்படி தொகையினை வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண். 2128 /2024 /H1** | தீர்மான எண். 788 அனுமதிக்கப்பட்டது |
| **28.10.2024** | **பொருள்:- 17 :** பெரம்பலூர் மாவட்ட நகர்ஊரமைப்பு உதவி இயக்குநர், அவர்களின் ந.க.எண்.661/2023-பெ.மா எண்ணுடைய 15.02.2024–ம் தேதிய செயல்முறைகள் மற்றும் ம.வ/ந.ஊ.உ.இ.(பெ.மா) எண்.10/2024 என எண்ணிடப்பட்ட ஆணையின் மூலம் பெரம்பலூர் நகராட்சி அரணாரை தெற்கு கிராம புல சர்வே எண்கள்–. 121/15A**1,16**,–ல் 0.66 ஏக்கர் (2700.00 ச.மீ ) நிலத்தில் உள்ள மனைப்பிரிவு மற்றும் அதற்கான வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், மேற்படி மனைப்பிரிவில் சாலை, பூங்கா, பொது உபயோகம் மற்றும் மின்பகிர்மானம் செய்வதற்குண்டான பகுதியினை திரு. நாகராஜன் த/பெ தங்கவேல், நகராட்சி ஆணையர் பெயருக்கு தான செட்டில் மெண்ட் பத்திரம் மூலம் பதிவு செய்து ஒப்படைக்கப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவண நகலையும் இணைத்து அனுப்பியுள்ளனர். மேலும், மேற்படி மனைப்பிரிவில் சாலை வசதி ,மழைநீர் வடிகால் அமைப்பு மற்றும் தெருவிளக்கு போன்ற வசதிகளை மேற்கொள்ள உரிய கட்டணங்களை வசூலித்திடவும், உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடத்தினை உட்பிரிவு செய்து வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்தும் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி மனைப்பிரிவிற்கு கூராய்வு கட்டணமாக ரூ.**1000/–** மற்றும் இடத்தின் சந்தை மதிப்பில் 3% நிலப்பயன் மாற்றக்கட்டணம், மனைப்பிரிவில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை வசதிகளான சாலை அமைப்பு, மழைநீர் வடிகால், தெருவிளக்கு அமைத்தல் குடிநீர், பூங்கா மற்றும் திறவிடங்களுக்கு வேலி அமைத்தல் தொடர்பான பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து அதற்கான தொகை ஆகியவற்றை வசூல்செய்து கொண்டும் தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் பெரம்பலூர் நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட இடத்தினை பெரம்பலூர் நகராட்சி ஆணையர் என்ற பெயரில் பட்டா மாற்றம் செய்தும் பெரம்பலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரின் ந.க.எண்.661/2023–பெ.மா– எண்ணுள்ள 15.02.2024ம் தேதிய கடிதம் மற்றும் ம.வ/ந.ஊ.உ.இ.(பெ.மா) எண்.10/2024–ன் மூலம் வழங்கப்பட்ட ஆணைகளின்படி பெரம்பலூர் நகராட்சி அரணாரை தெற்கு கிராம புல சர்வே எண்கள்– 121/15A**1,16**,–ல் 0.66 ஏக்கர் (2700.00 ச.மீ )நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு மற்றும் வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்கிட மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.1212/2024/எப்1** | தீர்மான எண். 789 அனுமதிக்கப்பட்டது |
| **28.10.2024** | **பொருள்:- 18 :** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்பாட்டில் உள்ளதால் பெரும்பாலான இடங்களில் மழைநீர் வடிகால்கள் முற்றிலும் இல்லை. வெகு சில இடங்களில் கழிவு நீர் கால்வாய்கள் **30** ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டு அவை பெரும்பாலும் சேதமடைந்த நிலையில் உள்ளன. மழைநீர் வடிகால்கள் சரிவர இல்லாததால் பெரும்பாலான இடங்களில் கழிவறை மற்றும் சமையறை கழிவுநீர் தவிர்த்து மழை நீரையும் பதாளசாக்கடை இணைப்பில் விடுவதால் மழை காலங்களில் கூடுதல் தண்ணீர் சென்று அழுத்தம் அதிகரித்து ஆங்காங்கே குழாய் அடைப்பு ஏற்பட்டு உடைப்பு ஏற்படும் நிலை | தீர்மான எண். 790 அனுமதிக்கப்பட்டது |

உள்ளது. எனவே, நகர்ப்பகுதி முழுவதும் புதிய சீரான வடிகால்கள் கட்டபடவேண்டியது அவசியமாகும். நகரின் அனைத்து பகுதிகளிலும் சேதமடைந்த மற்றும் விடுபட்டுள்ள இடங்களில் புதியதாக மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்கள் ( Drainage with Cover slap ) கட்டுவதற்கு விரிவான திட்ட மதிப்பீடு மற்றும் கருத்துருக்கள் தயார் செய்து அரசிடமிருந்து நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு நகரின் அனைத்து பகுதிக்களுக்கான Topographical Survey, Gradient Survey, Discharge and Flow Diagram, Structural Design, Detailed Estimate, Auto cadd Drawing, Levelling Survey செய்து ஒருங்கிணைத்து விரிவானதிட்ட அறிக்கை தயார் செய்து கொடுப்பதற்கு தகுதி வாய்ந்த பொறியியல் வல்லுநரை நியமிக்கவும் பொறியியல் வல்லுநருக்கான கட்டணம் மதிப்பீட்டுத்தொகையில் 1 % (ஒரு சதவீதம்) வரை செலவினம் மேற்கொள்வதற்கும் மேற்படி செலவினத்தினை திட்டநிதியை எதிர்நோக்தகி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 4195 /2024/இ1.

**28.10.2024**

**பொருள்:- 19 :** பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அலுவலக வளாகத்தில் Army Recuirement Rolly நடைபெற்றமைக்கு CCTV Camera மற்றும் TV Footage Monitering குடிநீர் மற்றும் Mobile Toilet அமைத்த பணிகளுக்கு 26.08.2023 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. அவ்வாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தன் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| Sl No | Particulars | S.JAYANTHI ,contractor | | | Tamilnadu Water supplys & Drainage System | | | Kannan, Contractor Perambalur | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Qty | Rate | Total Amount | Qty | Rate | Total Amount | Qty | Rate | Total Amount |
| 1 | Camera Cable 1700 mtr | 1700 | 27 | 45900 | 1720 | 27 | 46440 | 1720 | 27 | 46440 |
| 2 | HD Camera 16 Nos | 16 | 2500 | 40000 | 17 | 2500 | 45200 | 17 | 2500 | 42500 |
| 3 | Camera Connector | 16 | 300 | 4800 | 17 | 300 | 5100 | 17 | 300 | 5100 |
| 4 | SMPS Power Supply box 10 nos | 10 | 650 | 6500 | 10 | 650 | 6500 | 10 | 650 | 6500 |
| 5 | Hard Disk (HDD 2TB) | 1 | 7150 | 7150 | 1 | 7150 | 7150 | 1 | 7150 | 7150 |
| 6 | Hard Disk (HDD 4TB) | 1 | 11120 | 11120 | 1 | 11120 | 11120 | 1 | 11120 | 11120 |
| 7 | DVR RENTED (SIX DAYS) | 6 | 1500 | 9000 | 6 | 1500 | 9000 | 6 | 1500 | 9000 |
| 8 | TV 42" RENTED( SIX DAYS) | 6 | 1500 | 9000 | 6 | 1500 | 9000 | 6 | 1500 | 9000 |
| 9 | ELECTRICAL CABLE 100Mtr | 100 | 45 | 4500 | 105 | 45 | 4725 | 105 | 45 | 4725 |
| 10 | Camera fitting, Reassembling labour Charge 1 job | 1 | 26000 | 26000 | 10 | 26000 | 26000 | 10 | 26000 | 26000 |
| 11 | Daily monitering (Day and Night) include food and etc.(6 Days) | 6 | 2000 | 12000 | 7 | 2000 | 14000 | 7 | 2500 | 17500 |

தீர்மான எண். 791 அனுமதிக்கப்பட்டது

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | Mobile Toilet Material, Fittings, Reassembling Charges for 3 nos | 3 | 4000 | 12000 | 4 | 4000 | 16000 | 4 | 5000 | 20000 |
| 13 | Syntex Water Tank, Mobile Toilet, and other transport 1 job | 1 | 9000 | 9000 | 1 | 9000 | 9000 | 1 | 10000 | 10000 |
| 14 | Temporary Urinal Arrangement, Sheet Rent , 10 Ft Pole 50 Nos charges for 1 job | 1 | 14000 | 14000 | 1 | 14000 | 14000 | 1 | 14000 | 14000 |
| **Total Amount** | | | | **210970** | | | 220535 | | | 229035 |
| **GST 18%** | | | | **37975** | | | 39696 | | | 41226 |
| **Net Total** | | | | **248945** | | | 260231 | | | 270261 |

அலுவலககுறிப்பு :

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் திருமதி S.ஜெயந்தி ஒப்பந்ததாரரின்குறைந்த விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருமதி S.ஜெயந்தி ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| **28.10.2024** | பொருள்:- 20 : பெரம்பலூர் நகராட்சி அலுவலக வளாகத்தின் முன்புற பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுச்சுவர்களையொட்டி ஆக்கிரமிப்புகள் மற்றும் தற்காலிக கடைகள் அமைக்கப்பட்டுள்ளதால் அலுவலக முன்புற தோற்றத்தையும் சுற்றுச்சூழலுக்கும் மாசு ஏற்படும் வகையில் உள்ளது. எனவே, மேற்படி காலியிடத்தில் இந்நகராட்சியின் வருவாயினை பெருக்கும் நோக்குடன் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு தரைதளத்தில் கடைகள் கட்டுவதற்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். /2024/இ1. | தீர்மான எண். 792 அனுமதிக்கப்பட்டது |

//ஒம்//திருமதி.மா.அம்பிகா
நகர்மன்றதலைவர்
பெரம்பலூர் நகராட்சி

// உண்மை நகல்//

ஆணையாளர்
பெரம்பலூர் நகராட்சி